# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

தயாரித்தல் மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**2024 ஓகத்தில் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2024 ஓகத்தில் 55.5 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** இது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதத்தில் காணப்படுகின்ற போதிலும் தயாரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது. தொழில்நிலை தவிர, அனைத்து துணைச் சுட்டெண்களும் ஓகத்தில் நடுநிலையான எல்லைக்கு மேல் இருந்தன.

புதிய கட்டளைகளினதும் உற்பத்தியினதும் விரிவாக்கமானது முக்கியமாக உணவு மற்றும் குடிபானங்கள் துறையின் தயாரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திக்கு இசைவாக கொள்வனவுகளின் இருப்பு மாதகாலப்பகுதியில் விரிவடைந்தது. எனினும், ஓகத்தில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் தொழில்நிலை குறைவடைந்தது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் நீட்சியடைந்தது.

*கொமுசு தொகுப்பு - தயாரித்தல் அளவீடு*

| மாறி | யூலை | ஓகத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரித்தல்** | **59.5** | **55.5** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 62.0 | 58.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 61.5 | 59.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 54.0 | 45.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 60.5 | 56.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 57.6 | 56.2 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆண்டு இறுதியின் பருவகால கேள்வியின் சாதகமான தோற்றப்பாடு காரணமாக, அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன.

**தயாரிப்பு கொ.மு.சு 55.5**

**2024 ஓகத்து**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## உலகளாவிய தோற்றப்பாடு:

கொமுசு தயாரித்தல் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | குறைவடைகின்றது உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| ஐக்கிய அமெரிக்கா | குறைவடைகின்றது உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, அதே வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 செத்தெம்பர் 18 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**வியாபார நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு, பணிகளுக்கான இலங்கைக் கொ.மு.சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்) 2024 ஓகத்தில், 65.2 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** இது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் மெதுவான விரிவடைதலொன்றை எடுத்துக்காட்டுகின்றது.

தொழில் நடவடிக்கைகளின் தொடர்ச்சியான விரிவடைதலானது ஏனைய பல தொழில் நடவடிக்கைகளில் விரிவடைதலானது பெரும்பாலான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளினால் தூண்டப்பட்டிருந்தது. இதற்கமைய, பிரதானமாக பொழுதுபோக்கு மற்றும் களியாட்ட நடவடிக்கைகளில் காணப்பட்ட மேம்பாடுகள் காரணமாக ஏனைய தனிப்பட்ட பணிகள் என்பவற்றின் தொழில் நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தன. மேலும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் அத்துடன் போக்குவரத்து பணிகள் மற்றும் நிதியியல் பணிகள் என்பவற்றின் தொழில் நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், தொலைத்தொடர்பூட்டல், உண்மைச் சொத்து மற்றும் தகவல்தொழில்நுட்ப நிரலாக்க ஆலோசனையுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் என்பவற்றின் தொழில் நடவடிக்கைகள் முன்னைய மாதத்தைப் போன்று அதே மட்டத்தில் காணப்பட்ட அதேவேளை ஏனைய அனைத்து துறைகளின் நடவடிக்கைகள் மேம்பாடுகளைப் பதிவுசெய்தன.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக ஏனைய தனிப்பட்ட மற்றும் நிதியியல் பணிகள் நடவடிக்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட விரிவாக்கங்களின் மூலம் ஓகத்தில் அதிகரித்தன.

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் ஆதரவளிக்கப்பட்ட போதிலும், மெதுவான வீதத்தில் தொடர்ந்தும் மேம்பட்டன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | யூலை | ஓகத்.. | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **71.1** | **65.2** | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 66.2 | 61.2 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 49.0 | 48.0 | - | குறைவடைகின்றது உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 48.4 | 51.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 74.7 | 68.8 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் மேம்பட்டன.

**பணிகள்**
**கொ.மு.சு 65.2**
**2024 ஓகத்து**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல், 2024 செத்தெம்பர் 18 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள்* (spglobal.com))

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**முறையியல்**
வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.
**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.